# இயல் - 2

# கவிஞர் தே.ப. பெருமாளின் வாழ்க்கைக் குறிப்புகள்

*இயல் - 2*

# கவிஞர் தே.ப. பெருமாளின் வாழ்க்கைக் குறிப்புகள்

2.1 முன்னுரை

2.2 நாஞ்சில் நாட்டுச் சிறப்பு

2.3 பிறப்பு

2.3.1 கல்வி

2.3.2 குடும்ப நிலை

2.4 சமுதாயப்பணி

2.5 படைப்புச் சூழல்

2.6 சுதந்திரப் போராட்ட ஈடுபாடு

2.7 இலக்கிய ஈடுபாடு

2.8 திரைத்துறை ஈடுபாடு

2.9 நாடகத்துறை ஈடுபாடு

2.10 பத்திரிகைத்துறை ஈடுபாடு

2.11 வானொலித் தொடர்பு

2.12 பிற அறிஞர் தொடர்பு

2.13 கவிஞர் பெற்ற விருதுகள்

2.14 கவிஞரின் நூற்கள் பெற்றுள்ள அங்கீகாரம்

2.15 இறப்பு

2.16 கவிஞரின் நூற்கள்

2.16.1 கவிதைகள்

2.16.2 கதைகள்

2.16.3 நாவல்கள்

2.16.4 நாடகங்கள்

2.16.5 திறனாய்வு நூல்கள்

2.16.6 வாழ்க்கை வரலாற்று நூல்கள்

2.16.7 பிற இலக்கிய நூல்கள்

இயல் - 2

# கவிஞர் தே.ப. பெருமாளின் வாழ்க்கைக் குறிப்புகள்

## 2.1 முன்னுரை :-

தமிழன்னைக்கு அரும்பணி புரிந்துள்ள புலவர் பெருமக்கள் பலரைப் போற்றி வளர்த்த நாடு நாஞ்சில் நாடு. இத்தகைய சிறப்பு மிக்க நாஞ்சில் வள நாட்டைத்தன்னுள் கொண்டதே இன்றைய குமரி மாவட்டம். நாஞ்சில் நாட்டுப் பின்னணியில் எழுந்த இலக்கியங்கள் அறிஞர் உலகில் போற்றப்படுவனவாகவே உள்ளன.

## 2.2 நாஞ்சில் நாட்டுச் சிறப்பு :-

சமயம் வழி இலக்கியம் வளர்த்த பரம்பரையினரும் அவர்களைப் பேணிக் காத்து வந்த புரவலர் பெருமக்களும் நாஞ்சில் நாட்டுக் குடிமக்களாக வாழ்ந்து வந்தனர். எனவே இங்குத் தமிழும் சமயமும் தக்க முறையில் வேரூன்றித் தழைத்தன. பெரும்புலமைச் சதாவதானி செய்குத்தம்பிப்பாவலர், கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை, அறிஞர் சிதம்பரம் பிள்ளை, அறிஞர். கே. என். சிவராஜ பிள்ளை, பொருளாதார மேதை அறிஞர் பா. நடராஜன், அரசியல் மேதை மார்சல் திரு. நேசமணி, வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர். கே. கே. பிள்ளை முதலான அறிஞர் பெருமக்களும், இன்னும் நாடகக்கலைஞர்கள் நகைச்சுவை மன்னர்கள், நுண்கலைச்சிற்பிகள், சட்ட வல்லுநர்கள் எனப் பல்துறை செம்மல்கள் இம்மாவட்டத்தில் தோன்றி இதன் சிறப்பிற்குக் காரணர்களாக விளங்கினர்.

கவிஞர் தே.ப. பெருமாளும் இக்கால எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர். இவர் படைப்புக்கள் பல படைத்த சாதனையாளர். இதற்கு இவருடைய ஊரும், உறவும், வளர்ப்பும், காலச் சூழலும், கல்விமுறையும், உதவிய நிலைமையை அறிதல் இன்றியமையாததாகும்.

## *2.3 பிறப்பு :-*

கவிஞர் தே.ப. பெருமாள் குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலைச் சார்ந்த கோட்டாறு என்னும் ஊரில் திரு. தேசியாபிள்ளை அவர்களின் புதல்வராக 1916 -ம் ஆண்டு பிறந்தார். இவர் சைவ வேளாளர் மரபைச் சார்ந்தவர். இவரின் முழுப் பெயர் தேசியவிநாயகப்பகவதிப் பெருமாள். கோட்டாறு தே.ப. பெருமாள் என்னும் பெயரிலேயே முதல் முதலிலே எழுத்துலகிற்கு அறிமுகமானார்.

### *2.3.1 கல்வி :-*

கவிஞர் தே.ப. பெருமாளின் கல்வி பள்ளிப்படிப்போடு நின்று விட்டது. 6 -வது படிப்பு வரை படித்தவர். தமிழ் மொழியின் மீது அதிக ஆர்வம் கொண்டவர். பண்டிதர் சாஸ்தாங்குட்டிப்பிள்ளையிடம் கற்ற இரவு நேரக்கல்வியால் தமது தமிழ்ப் புலமையை மேலும் வளர்த்துக் கொண்டவர். இந்தி, மலையாள மொழிகளிலும் புலமையுடையவர்.

### *2.3.2. குடும்ப நிலை :-*

கவிஞர். தே. ப. பெருமாள் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர். கோட்டாற்றில் பீர்க்கன் சாயுபு என்ற ஒரு இஸ்லாமியரின் கடையில்

வேலை பார்த்து, பின்னர் சொந்தமாகக் கடைதொடங்கி நடத்தி வந்தார். இடையில் பொருள் இழப்பு ஏற்படவே கடையை மூடும் நிலைக்கு ஆளானார். அதன்பின் கைத்தறித்துணி வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு 1955 -இல் சென்னைக்குச் சென்று குடியேறினார். இவரது இல்லற வாழ்வு எளிமையானதாகவும், சிக்கலற்றதாகவும் இருந்தது. கவிஞர் மிகுந்த தெய்வ பக்தி உடையவர். நலிவுற்ற தமிழ் எழுத்தாளர் ஓய்வூதியமும் இவருக்குக் கிடைத்து வந்தது.

## *2.4 சமுதாயப்பணி :-*

கவிஞர். தே.ப. பெருமாள் தமது நண்பர்களுடன் சேர்ந்து "நாகர்கோவில் வர்த்தகக் குமஸ்தாக்கள் சங்கம்"[1] என்ற ஒரு சங்கத்தைத் தொடங்கி அதன் செயலாளராகப் பொறுப்பு வகித்து வந்தார். வர்த்தகத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒருநாள் விடுமுறை என்றிருந்ததை வாரம் ஒருநாள் (ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்) என மாற்றி அமைத்ததில் பெரும் பங்கு வகித்தார். திருவிதாங்கூரில் மலையாளமொழி ஆதிக்கத்தால் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருந்ததை எதிர்த்துத் தமது படைப்புக்களின் மூலம் கிளர்ச்சி செய்த இவர் குமரி மாவட்ட மக்கள் சங்கத்தைச் சென்னையில் நிறுவி அதன் தலைவராகவும் செயல்பட்டார். நாகர்கோவிலில் "இளங்கோமன்றம்"[2] அமைத்து அதன் பொறுப்பாளராகப் பதவி வகித்து அறிஞர் பலரது சொற்பொழிவுகளை நடத்தி அதன் மூலம் இளைஞர்கள் பலரைச் சொற்பொழிவாளர்களாக உருவாக்கினார். மேலும் கோட்டாற்றில் ஆசாத் வாசிப்பு சாலை ஒன்றையும் நிறுவினார்.

## 2.5 படைப்புச் சூழல் :-

கவிமணியோடு தே.ப. பெருமாளுக்குக் கிடைத்த தொடர்பே அவரை ஒரு படைப்பாளியாக்கியது எனலாம். இதனைக் கவிஞர் பெருமாள் தாம் எழுதிய கவிதைகளை அவ்வப்போது கவிமணியிடம் பாடிக் காட்டுவார். இக்கவிதைகள் எளிய நடையில் இன்னோசை கொண்டு கருத்துச் செறிவுடன் அமைந்திருப்பதைக் கண்ட கவிமணி, இவரிடம் " நீ எழுதிய பாடல்கள் எளிமையும் இனிமையும் கொண்டு அமைந்துள்ளன. கருத்துக்களும் நிரம்பிப் படிக்கச் சுவையாக உள்ளன. முடிந்தால் இவற்றைச் சேர்த்து ஒரு நூலாக வெளியிடு"[3] எனத்தூண்டி ஊக்கமும் கொடுத்தார்"[3] என்ற மேற்கோள் வெளிப்படுத்துகிறது.

இவர் காலத்தில் நிலவிய வாத்தகத் தொழிலாளர்கள் பிரச்சினைகளும், திருவிதாங்கூர் சமஸ்தான வரலாறுகளுமே, இவரை ஒரு பல்துறைப்படைப்பாளியாக்கி விட்டன. மரபுரீதியான இலக்கிய வாதிகளுடன் கொண்டிருந்த தொடர்பே இவரை ஒரு மரபிலக்கியப் படைப்பாளியாக்கிற்று என்பதில் ஐயமில்லை.

## 2.6 சுதந்திரப் போராட்ட ஈடுபாடு :-

சுதந்திரப் பேராட்டக் காலத்தில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த கவிஞர் தமது இறுதிக்காலம் வரையில் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை உடைய தேசிய வாதியாகத் திகழ்ந்தார். திருவிதாங்கூர் காங்கிரஸ், தமிழ்நாடு காங்கிரஸ் ஆகிய இரு அரசியல் அமைப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்திக் காந்தீயத்தில் அதிக நம்பிக்கைக் கொண்டிருந்தார். கதராடை அணிவதிலும் நாட்டம் கொண்டவர்.

## 2.7 இலக்கிய ஈடுபாடு :-

தமிழை முறையாகக்கற்ற கவிஞர் தே. ப. பெருமாள் தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்லாமல் ஹிந்தி, மலையாளம், இலக்கியங்களிலும் ஈடுபாடு உடையவர், மரபிலக்கிய நூல்களைக் கற்பதோடு அவற்றைச் சேகரித்து வைக்கும் பழக்கம் உடையவராகவும் இருந்தார். கவிஞர். தே.ப. பெருமாள் இலக்கியப் படிப்பாளியாக மட்டுமல்லாது, இலக்கியப் படைப்பாளியாகவும் விளங்கினார். கவிஞர் என்ற நிலையில் மட்டும் நின்று விடாமல் குழந்தை இலக்கியங்கள், நாவல், நாடகம், திறனாய்வு, வாழ்க்கை வரலாறு, தொகுப்பு மற்றும் பதிப்பு முதலான இலக்கியத்துறைகளிலும் வல்லவராகத் திகழ்ந்தார். 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்ப்பணி ஒன்றையே தமது முழு நேரப் பணியாகக் கொண்டிருந்தார்.

"இவர் 70 -க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி முடித்துளார்" [4] என்று பலரும் கருத்துத் தெரிவித்திருந்தாலும், 60 நூல்களின் பெயர்களே பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. கவிஞரின் நூல்களிலோ, கவிஞரைப்பற்றிய நூல்களிலோ 70 -க்கும் மேற்பட்ட நூல்கள் என்ற நிலையில் பட்டியலிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 2.8 திரைத்துறை ஈடுபாடு :-

ஒருமுறை கவிஞர் தே.ப. பெருமாள் தம் நண்பரான என். எஸ் கிருஷ்ணனின் உதவியோடு திரைத்துறையில் ஈடுபட விரும்பினார். ஆகவே சென்னையில் அவருடன் ஆறுமாதங்கள் தங்கி முயற்சி செய்தபின் அத்துறையில் அவருக்கு நாட்டம் ஏற்படாததால் அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்.

## 2.9 நாடகத்துறை ஈடுபாடு :-

கவிஞர் தே.ப. பெருமாள் இலக்கிய நாடகங்களில் ஈடுபாடு கொண்டதோடு ஆரம்பகாலத்தில் மேடை நாடகத்திலும் ஆர்வம் கொண்டிருந்தார். அதன் விளைவாக 'அமர் ஜோதி நாடக சபை' என்ற சபையை நாகர்கோவிலில் தொடங்கி, அச்சபையின் வாயிலாக 'இலட்சியபாதை' என்ற நாடகத்தை முதன்முதலில் அரங்கேற்றத் திட்டமிட்டார். அந்நாடகத்தில் நடிக்க கே. ஆர். ராம்சிங் என்ற நடிகரை ஏற்பாடு செய்து, கடைசி நேரத்தில் அந்நடிகர் வராததால் அந்நாடக முயற்சி கைவிடப்பட்டது. இம் முயற்சி தோல்வியடைந்தபோது கவிஞருக்கு ஏற்பட்டபொருள் இழப்பால் வியாபாரத் தொழில் செய்து வந்த கடையையே மூடும் நிலை ஏற்பட்டது.

## 2.10 பத்திரிகைத்துறை ஈடுபாடு :-

கவிஞர் தே. ப. பெருமாள் இலக்கிய இதழ்களையும் வாசிக்கும் பழக்கம் உடையவர். வாசகனாக மட்டுமின்றி பத்திரிகைகள் வாயிலாகத் தமது கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்துபவராகவும் விளங்கினார். சென்னையிலிருந்த காலத்தில் பல வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குப் பகுதி நேர நிருபராகவும் பணியாற்றினார். இலங்கையிலிருந்து வெளிவந்த 'வீரகேசரி' என்ற பத்திரிகையில் எட்டாண்டுக்காலம் பகுதி நேர நிருபராகப் பணியாற்றி இலங்கைத் தமிழர் போராட்டத்தைக் குறித்து எழுதிய இவர், 'சிங்கப்பூரிலிருந்து வெளியான திரையொளி' என்ற பத்திரிகையின் வாயிலாகத் திரைப்படம் குறித்த விமர்சனங்களையும்

எழுதி வந்தார்" [5]. மேலும் வசந்தம், சிவாஜி, அணிகலன், அமுத சுரபி, கலைமகள், ஆனந்த விகடன், குமரி மலர், ஆனந்த போதினி, முதலான இலக்கியப்பத்திரிகைகளிலெல்லாம் தமது படைப்புக்களை வெளியிட்டுள்ளார். இவருடைய முதல் கவிதையான 'மழை' ஆனந்த போதினி பத்திரிகையில் வெளிவந்தது. 'தொழிலாளர் உலகம்' என்ற மாத இதழிலும் கவிஞரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

## 2.11 வானொலித் தொடர்பு :-

கவியரங்கம் நிகழ்ச்சியை முதன்முறையாக திருச்சி வானொலி நிலையம் 1944 -ல் தொடங்கியபோது பங்கேற்ற 14 நபர்களில் ஒருவராக அமைந்து கவிபாடிய பெருமை இவருக்குண்டு. கவியரங்கத்தில் மட்டுமின்றி அரசியல் இலக்கிய மேடைகளிலும் பேசும் திறன் படைத்தவர். ஆனால் அவர் கவியரங்குகளையும் மேடைப் பேச்சுகளையும் காலப் போக்கில் தவிர்த்து விட்டார்.

## 2.12 பிற அறிஞர் தொடர்பு :-

கவிஞர் தே.ப. பெருமாள் தம் இளம் பருவத்திலேயே கவிமணியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றதுடன் "அவருடைய வாரிசு "[6] என்று பலராலும் அழைக்கப்பட்டவர். கலைவாணர் என் எஸ். கிருஷ்ணன், சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், ஆகியவர்களுடன் அணுக்கத் தொடர்பு வைத்திருந்த இவர் டி.கே.சி., நாஞ்சில் மனோகரன் முதலானவர்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார்.

கவிஞரது படைப்புக்களைக் குறித்துப் பண்டித தா. சாஸ்தாங் குட்டிப்பிள்ளை, நாவலர் டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார், இசைச் செல்வர் தி. இலக்குமணபிள்ளை, பத்ம ஸ்ரீ அவ்வை. தி. க. சண்முகம், முன்னாள் துணை வேந்தர் தி.மு. நாராயணசுவாமிபிள்ளை, பன் மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, டாக்டர். ஹாஜி, என். ஏ. நூர்முகம்மது, வித்துவான் மு. சண்முகம் பிள்ளை, ஆர். வீர பத்ரன், தியாகி பி. எஸ் மணி, கவிஞர் துறைவன், வித்துவான் வே. பூதலிங்கம் பிள்ளை முதலானவர்கள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களிலிருந்து கவிஞர் தே.ப. மேற்குறிப்பிட்ட அறிஞர்களோடு இலக்கிய ரீதியான தொடர்பு வைத்திருந்துள்ளார் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும் இவ்வறிஞர்கள் பலரும் கவிஞரின் நூற்களுக்கு அணிந்துரை எழுதியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## *2.13 கவிஞர் பெற்ற விருதுகள் :-*

" கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களால் 'திருவார் இளங்கவிஞன் ' என்று பாராட்டப் பெற்றவர் "[7]. "கவிஞர் கண்ணதாசனால் 'மூத்த கவிஞர்" என்று அழைக்கப் பெற்றவர் "[8] தமிழ்க் கவிஞர் மன்றத்தின் முதல் மாநில மாநாடு சென்னை மயிலாப்பூரில் 30-11-1975 அன்று நடைபெற்றபோது அந்நாளைய முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் கேடயம் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டார். சென்னைக் கவிமணி மன்றம் திறப்பு விழாவின் போது, முன்னாள் அமைச்சர் க. ராசாராம் அவர்கள், இவரது தமிழ்ப்பணியைப்பாராட்டி இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தினார். "ஸ்ரீலஸ்ரீ வடிவ அடிகளாரால் 'தேன் தமிழ்க்கவிஞர்' என்ற பட்டம் பெற்ற சிறப்புடையவர். "[9] கன்னியாகுமரி மாவட்டத்தமிழ்

எழுத்தாளர் சங்க மூன்றாவது சிறப்பு மாநாடு நாகர்கோவில் பெருமாள் திருமண மண்டபத்தில் 30-9-1987 - ல் நடைபெற்றபோது இவருக்குக் கவிதையால் பாராட்டு மடல் வழங்கிப் பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்யப்பட்டது. 'தேன்கவித் தென்றல்' முதலான சிறப்பு விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டது.

## 2.14 கவிஞரின் நூற்கள் பெற்றுள்ள அங்கீகாரம் :-

கவிஞர் தே. ப. பெருமாளின் நூற்கள் பலவும் பல்கலைக்கழகங்களின் பாட நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. 'தளவாய் வேலுத்தம்பி' என்ற வரலாற்று நவீனம் கேரளப்பல்கலைக் கழகத்தில் முதுகலை வகுப்புக்கும் மற்றொரு நவீனமான 'வேணாட்டு வேந்தன்' சென்னை , மதுரை, கோழிக்கோடு பல்கலைக்கழகங்களின் இளங்கலை பட்டப்படிப்புக்கும், 'கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும்' என்ற திறனாய்வு நூல் தில்லிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை வகுப்புக்கும், 'கன்னியாகுமரி', 'தமிழ்சுவை இன்பம்' , 'நெஞ்சமலர்கள் (கவிதைகள்)' என்ற நூல்கள் கேரளப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை வகுப்புக்கும், 'சுதந்திர தீபம்' என்ற இவரது கவிதை நாடகம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை வகுப்புக்கும் பாட நூற்களாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலும் இவரது நூல் பாடமாக வைக்கப்பட்டிருந்தது.

## 2.15 இறப்பு :-

கவிஞர் தே.ப. பெருமாள் விக்கல் காரணமாகக் குரல்வளையில் அடைப்பு ஏற்பட்டு 1989 -ம் ஆண்டு ஜீலை மாதம் 5 -ம்

நாள் இவ்வுலகவாழ்வை நீத்தார். கவிஞர் இறந்தாலும் அவர் தம் படைப்புக்கள் அழியாத இலக்கியச் செல்வங்களாகத் திகழ்கின்றன.

## 2.16 கவிஞரின் நூற்கள் :-

கவிஞர் எழுதிய நூற்கள் அனைத்தும் கவிதைகள், கதைகள், நாவல்கள், நாடகங்கள், திறனாய்வுகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், பிற இலக்கிய நூல்கள், என்ற முறையில் வகைப்படுத்தப்பட்டுப் பட்டியல் இடப்படுகின்றன.

### 2.16. 1. கவிதைகள் :-

1. இயற்கையின் நடனம் - 1944
2. கன்னியாகுமரி - 1984
3. குழந்தையரங்கு - 1948
4. சிறுவர் அமுது - 1989
5. தமிழ்ச்சுனை - 1944
6. நெஞ்சமலர்கள் - 1985

### 2.16.2 கதைகள் :-

7. ஆணவ அரசகுமாரி - 1988
8. சிந்திக்க வைக்கும் சிறுகதைகள் - 1988
9. சிரிப்பூட்டும் தெனாலிராமன் கதைகள் - 1988
10. சிற்பத்தின் சக்தி - 1948
11. தமிழக மன்னவர் - 1949

| | | |
|---|---|---|
| 12. | தெய்வீகத்திருக்கதைகள் | - 1989 |
| 13. | நாத ஓவியம் | - 1985 |
| 14. | நீதி பூத்த நெஞ்சம் | - 1989 |
| 15. | புலவர் வரலாற்றுக் கதைகள் | - 1988 |
| 16. | பெரிய புராணக் கதைகள் 1- ம் பாகம் | - 1974 |
| 17. | பெரிய புராணக் கதைகள் 2- ம் பாகம் | - |
| 18. | பெரிய புராணக் கதைகள் 3- ம் பாகம் | - |
| 19. | பெரிய புராணக் கதைகள் 4 -ம் பாகம் | - 1976 |
| 20. | மறக்கமுடியாத மாமன்னர் கதைகள் | - 1977 |
| 21. | முத்துக்கதைகள் | - 1979 |

### *2.16.3 நாவல்கள் :-*

| | | |
|---|---|---|
| 22. | இசைக் கோமகன் | - 1983 |
| 23. | சிற்பியின் கனவு | - 1960 |
| 24. | தளவாய்வேலுதம்பி | - 1962 |
| 25. | புதிய நெஞ்சம் புதிய உணர்ச்சி | - 1985 |
| 26. | வஞ்சி கோமகள் | - 1965 |
| 27. | வாழ்வில் வசந்தம் | - 1976 |
| 28. | வீரதீபம் | - |
| 29. | வேணாட்டு வேந்தன் | - 1979 |

### *2.16.4 நாடகங்கள் :-*

| | | |
|---|---|---|
| 30. | ஆறு நாடகங்கள் | |
| 31. | சாந்தி முதலிய ஓரங்க நாடகங்கள் | - 1964 |

32. சுதந்திர தீபம் - 1987
33. தமிழுக்குத் தன்னையே தந்தவன் -
34. மன்னன் திருமகள் - 1992
35. வாசவதத்தை - 1969

## *2.16.5 திறனாய்வு நூல்கள் :-*

36. இலக்கியத்தில் இன்பச்சுவை - 1989
37. கவிஞர் கண்ணதாசன் திரை இசைப் பாடல்கள் ஒரு திறனாய்வு - 1988
38. கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும் - 1971
39. தமிழ்ச்சுவை இன்பம் - 1984
40. பேயைக்கண்டு பயமா ? -
41. முத்துக்குவியல் -

## *2.16.6 வாழ்க்கை வரலாற்று நூல்கள் :-*

42. அறிஞர்களின் வாழ்விலே - 1975
43. ஆழ்வார்கள் வரலாற்றுக்கதைகள் - 1983
44. உலகச் சுடர் மணிகள் - 1987
45. உவகையூட்டும் உலக நிகழ்ச்சிகள் -
46. கவிமணி - 19 55
47. குமரி மாவட்டக் கவிஞர்களும் கவிதைகளும் - 1988
48. சுடர் மணிகள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் - 1988

49. ஞானப்பெருமக்கள் வரலாற்றில்
வியப்பூட்டும் நிகழ்ச்சிகள் - 1986

50. தேவார, திருச் செல்வர்கள் - 1980

51. நினைவில் நிற்பவர்கள் -

52. பாலமுருகனடிமை - 1975

53. மேதைகள் வாழ்விலே சுவையான
நிகழ்ச்சிகள் - 1970

## 2.16.7 பிற இலக்கிய நூல்கள் :-

54. அறிஞர்களின் பொன் மொழிகள் - 1963

55. கவிமணி தேவிமலர் - 1975

56. கவிமணி நினைவு மலர் -

57. கவிமணி மலர் -

58. தமிழ்நாடு மாவட்டக் குறிப்புகள் -

59. பிரபஞ்சமும் அறிவியலும் -

60. பெரியோர் சொல்லமுதம் - 1968

## அடிக்குறிப்புகள் :-

1. தே.ப பெருமாள் , 'குமரி மாவட்டக் கவிஞர்களும் கவிதைகளும்' , ப. 9
2. பி.ஜே. பொன்னையா, ' நாஞ்சில் ஏடு' ,ப.94
3. பி.குமரேசன்,'கவிஞர் தே.ப.பெருமாள் கவிதைகள் ஓர் ஆய்வு' ப.27
4. மேலது, ப.15
5. தே.ப.பெருமாள், ' மு.கா.நூ ' ப. 9
6. பி. குமரேசன், மு.கா.நூ ப. 9 (முன்னுரை)
7. தே.ப. பெருமாள், 'கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும் ' , முன்னுரை (ப. vii)
8. மேலது, அணிந்துரை, ( vi)
9. தே.ப. பெருமாள், 'குமரி மாவட்டக் கவிஞர்களும் கவிதைகளும் ', ப. 10